LIBRARY
30 DEC 2011
Eastern University, Sri Lanka

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce & Management

**(External Degree)**

**Part I (2nd) Examination in Bachelor of Business Administration 2007/2008(Proper/Repeat) & Bachelor of Economics 2008/2009(Proper/Repeat)**

**(March/April 2011)**

**External**

**(Proper/Repeat)**

## EXB 204/EXE 2024 Marketing Management

முதலாவது வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம்: 3மணித்தியாலங்கள்

---

Q1.பின்வரும் விடய ஆய்வினை கவனமாக வாசித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

**சோனி (Sony)** குழுமம் ஜப்பான் நாட்டிலுள்ள டோக்கியோ நகரை தலைமையிடமாக கொண்டு செயல்படும் ஒரு பன்னாட்டு நிறுவனமாகும். இந்நிறுவனம் கணிணி ஊடக தயாரிப்புத்துறையிலும், மின்னணு சாதனங்கள் உற்பத்தியிலும் ஆதிக்கம் செலுத்திவருகிறது. ஆண்டுக்கு சுமார் 88.7 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் ஈட்டும் சோனி நிறுவனம் மின்னணுவியல், நிகழ்படம், தகவல் தொடர்பு, நிகழ்படவிளையாட்டுதுறை, தகவற்தொழில்நுட்பம் ஆகிய துறைகள் சார்ந்த சாதனங்களை தயாரித்து வருகிறது. குறைக்கடத்தி துறைசார்ந்த விற்பனையில் சோனி நிறுவனம் முதல் 20 இடங்களுக்குள் பட்டியலிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**Sony launches two Android 3.0 tablets**

டேப்லட் கணிணி சந்தையில் ஆப்பிள் நிறுவனத்துடன் போட்டி போடும் வகையில் சோனி நிறுவனம் இரண்டு என்ட்ராய்டு டேப்லட்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இது கூகுளின் மென்பொருளை மையமாக கொண்டு உருவாக்கப்பட்டது. ஜப்பான் கம்பெனியான சோனி இந்த டேப்லட்கள் மற்ற சோனியின் சாதனங்களுடன் இயங்கவல்லது.

இந்த டேப்லட்கள் S1 மற்றும் S2 என்று பெயரிடப்பட்டுள்ளது. S1 டேப்லட் ஆனது உயர்ரக பொழுதுபோக்கை முதன்மையாக கொண்டது. S2 டேப்லட் ஆனது தொலைதொடர்பு மற்றும் பொழுதுபோக்கு இரண்டையும் மையமாக கொண்டது.

இந்த இரண்டு டேப்லட்களிலுமே Wifi , 3G மற்றும் 4G வசதிகள் உள்ளது. இதன் மையநோக்கமே விளையாட்டு , இணைய புத்தகங்கள் மற்றும் வீடியோக்களை சோனியின் "Premium Network Services" என்ற சேவையின் மூலம் மக்களுக்கு தருவதுதான்.

S1 டேப்லட் 9.4 இன்ச் தொடு திரையைக்கொண்டது. மேலும் இது "off- center of gravity " என்ற முறையில் கையில் எளிதாக பிடித்துக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

S2 டேப்லட்இரண்டு 5.5 இன்ச் தொடு திரையைக் கொண்டது. இதை மடித்தும் வைத்துக் கொள்ளலாம். இந்த தொடுதிரைகளை ஒரே திரையாகவும் உபயோக்கிலாம் இல்லையெனில் இருவேறு திரைகளாவும் பயன்படுத்தலாம்.

இந்த சோனியின் "premium network service" மூலம் பெறக்கூடியவை Qriocity music, video service மற்றும் PlayStation Suite.

இந்த PlayStation Suite மூலம் உண்மையான PlayStation விளையாட்டுக்களை அதே தெளிவுடன் இந்த டேப்லட்களில் விளையாடமுடியும். மேலும் இதை மற்ற சோனிசாதனங்களை இயக்கும் ரிமோட்கண்ட்ரோலாகவும் உபயோகிக்கமுடியும்.

சோனி நிறுவனத்தின் வைஸ்ப்ரசிடன்ட் Kunimasa Suzuki , புதுவிதமான பொழுதுபோக்கு சாதனங்களை மற்றும் வாழ்கையின் தேவைக்கேற்றவகையில் அமைக்கப்பட்ட சாதனங்களை மக்களுக்கு வழங்கும் நிறுவனமாகும்.

**வினாக்கள்:**

1. Sony நிறுவனம் இப்புதிய ஏன்ட்ராய்டு டேப்லட்களை சர்வதேச சந்தையில் அறிமுகப்படுத்துகையில், எவ்வகையான தந்திரோபாயங்களை மேற்கொள்ளலாம் என நீர் கருதுகின்றீர்.

   (10 புள்ளிகள்)

2. போட்டிநிறைந்த சந்தையில் (Competitive Market), Sony நிறுவனத்தின் இப்புதியபொருள் அறிமுகம் சிறந்த தந்திரோபாயத் தெரிவாக அமையும் என நீர் கருதுகின்றீரா? ஆராய்க.

   (08 புள்ளிகள்)

3. Sony நிறுவனம் புதிய தொழில்நுட்பத்தை கையாள்வதில் சிறந்து விளங்குகின்றது. எனினும் சர்வதேச சந்தையில் இதன் சந்தைப் பங்கு (Market Share) முதல் நிலையில் காணப்படவில்லை. விவாதிக்க.

   (10 புள்ளிகள்)

(மொத்தம் 28 புள்ளிகள்)

30DEC 20
Eastern University, Sri

Q2.

a) "சந்தைப்படுத்தல்" என்பதை சுருக்கமாக குறிப்பிட்டு, அதன் முக்கியத்துவத்தைக் விளக்குக.

(05 புள்ளிகள்)

b) சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய எண்ணக்கருக்களை குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

(06 புள்ளிகள்)

c) "நிறுவனத்தின் இலாபகரமான வளர்ச்சியை தீமானிப்பது சந்தைப்படுத்தலின் முக்கிய பொறுப்பாகும்" இக்கூற்றை ஆராய்க.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

Q3.

a) பண்புகள் அடிப்படையில் பொருட்கள், வேவைகளை வேறுபடுத்தி சுருக்கமாக விபரிக்க,

(05 புள்ளிகள்)

b) சந்தைத் துண்டமாக்கல் என்றால் என்ன? பொருள் பேதப்படுத்தலில் இருந்து சந்தைத் துண்டமாக்கல் எவ்வாறு வேறுபடுகின்றது?

(06 புள்ளிகள்)

c) சந்தைத் துண்டமாக்கலின் அமைப்புக் கவர்ச்சித் தன்மையை மதிப்பிடுவதற்கு நீர் எவ்வாறு Porter இன் ஐந்து சக்திகள் (five forces) மாதிரியை பயன்படுத்துவீர் என விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

Q4.

a) நிறுவனங்களால் கையாளப்படும் வேறுபட்ட விலைத் தந்திரோபாயங்களை (Pricing Strategies) விளக்குக.,

(05 புள்ளிகள்)

b) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியின் (Marketing Research) நோக்கங்கள், தொழிற்பாடுகளை விளக்குக?

(06 புள்ளிகள்)

c) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியை (Marketing Research) நடைமுறைப்படுத்துவது தொடர்பான முக்கிய படிநிலைகளை அடையாளம் காண்பதுடன் அப்படிநிலைகளுடன் தொடர்புடைய பிரச்சனைகளை சுருக்கமாக தருக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

Q5.

a) சந்தைப்படுத்தல் கலவை (Marketing Mix) என்றால் என்ன? அதன் கூறுகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

b) கைத்தொழில் சந்தை (Business Market), நுகர்வோர் சந்தையில் (Consumer Market) இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? விளக்குக.

(06 புள்ளிகள்)

c) மேம்படுத்தல் கலவையின் (Promotional Mix) கூறுகளான, விளம்பரப்படுத்தல் (Advertising), தனிநபர் விற்பனை (Personal Selling) என்பவற்றை வேறுபடுத்துக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

Q6.

a) நுகர்வோர் பெறுமதி (Customer Value) எனும் பதத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

b) வியாபாரகுறி (Branding) பொருளுக்கு நிலையான தேவைகளை உருவாக்கவும், விலைப் போட்டியைத் தவிர்க்கவும் பெருமளவில் உதவுகின்றன. வியாபார குறியிடுவதன் நோக்கங்களை குறிப்பிடுக?

(06 புள்ளிகள்)

c) புதிய பொருள் அபிவருத்தி (New Product Development) படிமுறைகளை உதாரணத்துடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)

Q7.

a) வியாபார நிறுவனங்களில் வாடிக்கையாளர் திருப்தியின் (Customer Satisfaction) முக்கியத்துவத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

b) ஓர் நிறுவனத்தின் வெற்றிக்கு சந்தைப்படுத்தல் தகவல் முறைமை (Marketing Information System) எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பதனை ஆராய்க?

(06 புள்ளிகள்)

c) உலக நிதி நெருக்கடியால் சந்தைப்படுத்தல் தீர்மானங்கள் மிகவும் பாரியளவில் பாதிக்கப்படுகின்றன. இலங்கையில் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களில் உலக நிதி நெருக்கடியானது எவ்வாறு செவ்வாக்கு செலுத்துகின்றது என்பதை விளக்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 18 புள்ளிகள்)